DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 3 of 2018** |
| **Deposition of witness for** | **:** | **PW- 4** |
| **Name** | **:** | **திரு. சாந்தகுமார்** |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**07.10.2023**

A2 absent. Petition U/s 317 Cr.P.C filed and allowed. A1, A4 Present.

**முதல் விசாரணை**

நான் தற்போது அண்ணாகாலனியில் குடியிருந்து பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் பால்துரை, தமிழ்செல்வி ஆகியோரை தெரியும். விஜயாவை தெரியாது. எதிரிகளை தெரியும். 03.10.2017-ம் தேதி காலை 6, 6.15 மணி இருக்கும், எனக்கு பால்துரை போன் செய்தார். பிரச்சனையில் தன்னை அடித்து விட்டதாக சொன்னார். உடனே நான், ராமச்சந்திரன் மற்றும் பிரபாகரனுக்கு போன் செய்து 3 பேரும் பைக்கை எடுத்து கொண்டு அசா1 பால்துரை வீடு இருக்கும் கேர்ன்கில் எஸ்டேட்டுக்கு போனோம். அங்கு போனபோது அசா1 பால்துரைக்கு அடிப்பட்டு நெற்றியில் ரத்தம் வந்து கொண்டிருந்தது. பின் 108 ஆம்புலன்சுக்கு பிரபாகரன் போன் செய்து அந்த ஆம்புலன்ஸ் வந்தது.

நாங்கள் அசா1-ஐ ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம், நாங்கள் பின்னால் பைக்கில் சென்றோம். பின்னால் சென்று பார்த்தபோது ஆஜர் 1-வது எதிரியின் வீட்டில் பால்துரை கட்டியிருந்த வீட்டில் தகரங்கள் உடைந்து இருந்தது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ரங்கசாமியின் வீடு சேதம் அடைந்து இருந்தது என்றால் அந்த வீட்டை பால்துரைதான் கட்டி இருந்தார். வீடு யாருக்கு சொந்தம் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும், அசா1 பால்துரைக்கும் அண்ணா காலனியில் குடியிருந்த வகையில்தான் பழக்கம் என்றால் அதற்கு முன்பு இருந்தே பழக்கம். அண்ணாகாலனியில் இருந்து கருணாநிதி காலனிக்கு இடையே சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/. Thiru. A. Abdul Kadhar.
District Judge, Udhagamandalam